**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, திண்டிவனம்,**

**முன்னிலை: ஸ்ரீமதி. ம. இளவரசி M.L.,**

**நீதித்துறை நடுவர் எண். I திண்டிவனம்.**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16-ம் நாள் திங்கள்கிழமை**

**2056 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 02-ம் நாள்**

**CC. No.168 of 2025**

**(CNR No.TNVP10-00724-2025)**

| | | | |
|---|---|---|---|
| 1) | வழக்கு எண் | : | C.C. No.168/2025 |
| 2 | குற்ற முறையீடுபவர் | : | தமிழ்நாடு அரசு அதன் சார்பாக<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>வெள்ளிமேடுபேட்டை காவல் நிலையம்,<br>குற்ற எண். 207/2021,<br>இதச பிரிவுகள் 294(b), 506(2), 352 |
| 3 | எதிரியின் விவரம் | | ஹரிவரசன் வயது 29,<br>த/பெ பகீரதன்<br>தாதாபுரம்<br>திண்டிவனம் |
| 4 | சம்பவ தேதி | : | 04.08.2021 |
| 5 | முறையீடு | : | 05.08.2021 |
| 6 | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாள் | : | Anticipatory Bail |
| 7 | குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 10.05.2025 |
| 8 | குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | : | 09.01.2026 |
| 9 | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | : | ---- |

ELAVARASI

Digitally signed by ELAVARASI
Date: 2026.03.16 17:21:10 +0530

<table>
<tr><td>10</td><td>சாட்சிகளின் விசாரணை</td><td>:</td><td>Witness</td><td>Date of Chief</td><td>Date of Cross</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>PW-1</td><td>11.03.2026</td><td>11.03.2026</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>PW-2</td><td>11.03.2026</td><td>11.03.2026</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>PW-3</td><td>13.03.2026</td><td>13.03.2026</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>PW-4</td><td>13.03.2026</td><td>13.03.2026</td></tr>
<tr><td>11</td><td>பிரிவு 351(1)(பி) BNSS ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td>:</td><td colspan="3">16.03.2026</td></tr>
<tr><td>12</td><td>எதிரிகள் தலைமறைவு காலம் பற்றிய விவரம்</td><td>:</td><td colspan="3">இல்லை</td></tr>
<tr><td>13</td><td>மேல்முறையீடு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள்</td><td>:</td><td colspan="3">இல்லை</td></tr>
<tr><td>14</td><td>தண்டனை அல்லது உத்தரவு</td><td>:</td><td colspan="3">எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 352, 506(2) ன் கீழான குற்றமானது அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து பிரிவு 271(1) BNSS- ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>15</td><td>காலதாமதத்தின் விளக்கம்</td><td>:</td><td colspan="3">___</td></tr>
</table>

இவ்வழக்கானது கடந்த 10.05.2025-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் 13.03.2026-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 2

ELAVARASI
Digitally signed by ELAVARASI
Date: 2026.03.16 17:21:18 +0530

அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.சந்திரன், B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், விசாரணைக்கு வரப்பெற்று இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு பின்பு வழக்கு ஆவணங்களையும் பரிசீலக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றத்தில் வழங்கும்.,

**தீர்ப்புரை**

**1) குற்ற அறிக்கையின் சுருக்கம்:-**

வெள்ளிமேடுபேட்டை காவல் நிலைய சரகம் தாதாபுரம் கிராமத்தில் கடந்த 04.08.2021ம் தேதி இரவு சுமார் 9.30 மணியளவில் இவ்வழக்கின் வாதியானவர் தன் வீட்டின் வாசலில் நின்று கொண்டிருந்தபோது எதிரியானவர் குடிபோதையில் வந்து வாதியையும் அவரது குடும்பத்தாரையும் பார்த்து கோத்தா தேவிடியா பையா என்னிடம் உன்னுடைய வேலையை காட்டறியா என்று அசிங்கமாக திட்டி தன் கையில் வைத்திருந்த பீர் பாட்டிலால் வாதியை குத்த வந்தபோது அதனை தடுத்து வாதி மற்றும் சாட்சி- 2 துரைராஜிக்கும் சொற்ப காயத்தை ஏற்படுத்தியும், இதனை வெளியில் யாரிடமாவது சொன்னால் கொன்றுவிடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்து குற்றம் புரிந்ததாக எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 352, 506(ii) ன்படி வெள்ளிமேடுபேட்டை காவல் உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்ட இவ்வழக்கானது இதச பிரிவுகள் 294(b), 352, 506(2)- ன்படி ன் கீழ் விசாரணைக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.16 17:21:25 +0530

அனுப்பப்பட்டது.

3) எதிரி நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் பிரிவு 230-BNSS-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

4) வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது குற்றச்சாட்டு வினவுவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததால் எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 352, 506(ii) ன் கீழான குற்றச்சாட்டுகள் குறித்து வனைந்து விளக்கி கூறி வினவிய போது எதிரி அவற்றை மறுத்து தான் குற்றவாளி இல்லை என்று கூறியதால் அரசு தரப்பில் சாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

5) இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா. 1 முதல் அ.சா. 4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் முன்னிடப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சியம் அளிக்கப்படவில்லை.

**6) வழக்கின் சுருக்கம்**

➔ பாதிக்கப்பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 சம்பவம் பற்றியும் புகார் அளித்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார்.

➔ கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 சம்பவத்தின்போது யார் தாக்கினார்கள் என்று தெரியாது என அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார் .

➔ பார்வை மகசர் சாட்சியான அ.சா.3 இந்த வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது

ELAVARASI
Digitally signed by ELAVARASI
Date: 2026.03.16 17:21:31 +0530

என அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார்.

- ➔ காவல் உதவி ஆய்வாளர் அ.சா.4 வழக்கின் புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

7). அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரியை பாதிக்கக்கூடிய அம்சங்கள் குறித்து எதிரியிடம் பிரிவு 351(1)(ஆ)-ன் BNSS படி வினவியபோது எதிரி பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்தனர். எனவே, எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

8) <u>**தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை:-**</u>

**இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் இதச பிரிவுகள், 294(b), 352 506(2) ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

9. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் சாட்சியங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

10. அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சிகள் அ.சா.1 முதல் அ.சா.4 சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சாட்சிகள் மூலமாக எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டதால் தக்க தண்டனை வழங்குமாறு வாதிட்டார்.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.16 17:21:36 +0530

11. எதிரி  தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.1 மற்றும் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 ஆகியோர் முரண்பட சாட்சியம் அளித்துள்ளனர். மற்ற சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் பிறழ் சாட்சியம் அளித்துள்ளனர். எனவே சந்தேகத்தின் பலனை அளித்து எதிரியை குற்றவாளி அல்ல என தீர்மானித்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**12) சாட்சிய பரிசீலனைகளும், தீர்வும் ;**

நிகழ்நிலை புகார்தாரரான **அ.சா.1 திரு. ராமு** அவரது சாட்சியத்தில் சுமார் 4 வருடத்தற்கு முன்னதாக ஒரு நாள் இரவு 9.30 மணியளவில் தனதுவீட்டிற்கு எதிரில் சண்டை நடந்தது எனவும், அதனை தான் மறித்துவிட சென்றபோது யாரோ தனது கையில் கிழித்ததுபோல இருந்தது எனவும், அதில் தனது இடது கையில் காயம் ஏற்பட்டதாகவும், தன்னுடன் மறிக்க வந்த துரைராஜன் என்பவருக்கும் கையில் அடிபட்டது எனவும், அடிபட்ட தானும், துரைராஜனும் தாதாபுரம் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டார்கள் எனவும், பின்னர் வெள்ளிமேடுபேட்டை காவல் நிலையத்திற்கு சென்று எதிரியின் மீது சந்தேகத்தின்பேரில் புகார் கொடுத்தார் எனவும், போலீசார் வழக்கு சம்மந்தமாக தன்னை விசாரித்தார்கள் எனவும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார்.

13. கண்ணுற்ற சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட **அ.சா.2 திரு.துரைராஜன்** அவரது சாட்சியத்தில் சுமார் 4, 5 வருடத்திற்கு முன்னதாக ஒரு நாள் அ.சா.1 ன்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.16 17:21:44 +0530

வீட்டின் எதரில் சண்டை நடந்தது எனவும், அதனை தானும், ராமுவும் மறிக்க சென்றதபோது தங்களுக்கு கையில் அடிபட்டது எனவும், அந்த இடம் இருட்டாக இருந்ததால் தங்களை யார் எதனால் தாக்கினார்கள் என்று தெரியாது எனவும், அடிபட்ட தானும், ராமுவும் தாதாபுரம் மருத்துவமனைக்கு சென்று சிசிக்சை எடுத்துக்கொண்டார் எனவும், பின்னர் ராமு வெள்ளிமேடுபேட்டை காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தார் எனவும், யார் மீது கொடுத்தார் என்று தெரியாது எனவும், போலீசார் வழக்கு சம்மந்தமாக தன்னை விசாரித்தார்கள் எனவும் அரசு தரப்பு வழகிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார்.

14. பார்வை மகசர் சாட்சியான முன்னிலைப்படுத்தப்பட்ட **அ.சா.3 திரு. பழனி** அவரது சாட்சியத்தில் சுமார் 4,5 வருடத்திற்கு முன்னதாக கேட்டுக்கொண்டதால் கையொப்பம் செய்தததாகவும், இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது எனவும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை எனவும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார்.

15. கூடுதல் சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட **அ.சா.4 திரு. கஜேந்திரன் காவல் உதவி ஆய்வாளர்** அவரது சாட்சியத்தில் கடந்த 07.08.2021 ம் தேதி 15.00 மணிக்கு உதவி ஆய்வாளர் ராஜேஷ் நிலைய பொறுப்பிலிருந்தபோது காவல் நிலைய சி.எஸ்.ஆர். 401/2021 ஐ பார்வையிட்டு அ.சா.1 ராமு என்பவர் கொடுத்த புகாரின்பேரில்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.16 17:21:51 +0530

நிலைய குற்ற எண்.207/2021 இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii) ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் எனவும், பின்னர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பழனி மற்றும் முருகன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் எனவும், பின்னர் வழக்கின் சம்பவ சாட்சிகளான ராமு, துரைராஜன், சுரேஷ்பாபு ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் எனவும், சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரிய வர எதிரியை தேட எதிரி விழுப்புரம் மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று பிணையில் சென்றிருந்தார் எனவும், சாட்சி -2 க்கு லேசான காயம் என்பதாலும், மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை என்பதாலும் வழக்கின் சட்டப்பிரிவுகளான 294(b), 324, 506(ii) IPC @ 294(b), 352, 506(ii) ன்படி பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தார் எனவும், பின்னர் வழக்கின் விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 352, 506(ii)ன்படி குற் ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார் எனவும் குறிப்பிட்டுள்ளார். அ.சா.4 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

16. கடந்த 04.08.2021ம் தேதி இரவு சுமார் 9.30 மணியளவில் அ.சா.1 அவரது வீட்டின் வாசலில் நின்று கொண்டிருந்தபோது எதிரியானவர் குடிபோதையில் வந்து அ.சா.1-யும், அவரது குடும்பத்தாரையும் பார்த்து கோத்தா தேவிடியா பையா என்று

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.16 17:21:59 +0530

அசிங்கமாக திட்டி தன் கையில் வைத்திருந்த பீர் பாட்டிலால் வாதியை குத்த வந்தபோது அதனை தடுத்துபோது வாதி மற்றும் சாட்சி- 2 துரைராஜிக்கும் சொற்ப காயத்தை ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்ததாக அரசு தரப்பு வழக்காகும்.

17. பாதிக்கப்பட்ட சாட்சிகளான அ.சா.1 காயம்பட்டது பற்றி சாட்சியமளித்த போதிலும், அ.சா.1 ஆனவர் அவரது சாட்சியத்தில் சண்டையை மறித்துவிட சென்றபோது யாரோ தனது கையில் கிழித்ததுபோல் இருந்ததாக அரசு தரப்பு வழக்கிற்கு ஆதவரளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.1 அளித்த புகாரில் எதிரியின் பெயரை குறிப்பிட்டுள்ள நிலையில் அவரது சாட்சியத்தில் எதிரி மீது சந்தேகத்தின்பேரில் புகார் அளித்ததாக கூறியுள்ளார். எதிரி அடித்ததாக அறுதியிட்டு சொல்லவில்லை. மேலும் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 ஆனவரும் சம்பவத்தின்போது யார் எதனால் தாக்கினார்கள் என்று தெரியாதுஎன அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார். பார்வை மகசர் சாட்சியான அ.சா.3 ஆனவரும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார். மேற்கண்ட சம்பவம் குறித்து சம்பவ இட சாட்சிகள் எதிரிக்கு எதிராக எவ்வித சாட்சியமும் முன்னிடப்படவில்லை. காவல் உதவி ஆய்வாளர் அ.சா.4 வழக்கின் புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார். எனவே மேற்படி சாட்சிகளிலிருந்து இவ்வழக்கின் அ.சா.1-யை எதிரியானவர் குடிபோதையில் வந்து வாதியையும் அவரது குடும்பத்தாரையும் பார்த்து அசிங்கமாக திட்டியதாகவோ, எதிரி கையில் வைத்திருந்த பீர் பாட்டிலால் அ.சா.1-யை குத்த வந்ததை தடுத்தபோது அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோருக்கு சொற்ப

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.16 17:22:08 +0530

காயத்தை ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்ததாகவோ கூறப்படும் குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

18. அரசு தரப்பு சாட்சியங்கள் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள்படியாக இதச பிரிவுகள் 294(b), 352, 506(2) ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**19. இறுதியாக, எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 352, 506(2) ன் கீழான குற்றமானது அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து பிரிவு 271(1) BNSS- ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

20. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. எதிரி எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் அது இதன் மூலம் ரத்து செய்யப்படுகிறது.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணியில் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 16 -ம் திங்கள்கிழமை 2026-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ELAVARASI Digitally signed by ELAVARASI
Date: 2026.03.16 17:22:24 +0530

நீதித்துறை நடுவர் எண். I,

திண்டிவனம்.

**இணைப்பு:-**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திரு.ராமு | பாதிக்கப்பட்டசாட்சி மற்றும் நிகழ்நிலை புகார்தாரர் |
| அ.சா.2 | திரு.துரைராஜன் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | திரு.பழனி | பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.4 | திரு.கஜேந்திரன் காவல் உதவி ஆய்வாளர் | கூடுதல் சாட்சி |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:-**

| அ.சா.ஆ. எண்கள். | தேதி | ஆவணங்களின் விபரம் | ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட சாட்சிகள் |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 05.08.2021 | புகார் மனு | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | 07.08.2021 | பார்வை மகசரில் உள்ள அ.சா.3 ன் கையொப்பம் | அ.சா.3 |
| அ.சா.ஆ.3 | 07.08.2021 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.4 |
| அ.சா.ஆ.4 | 07.08.2021 | பார்வை மகசர் | அ.சா.4 |
| அ.சா.ஆ.5 | 07.08.2021 | மாதிரி வரைபடம் | அ.சா.4 |
| அ.சா.ஆ.6 | 09.03.2022 | பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.4 |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றுப்பொருட்கள்**:- இல்லை

**எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:-இல்லை

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.16 17:22:31 +0530

நீதித்துறை நடுவர் எண். I,

திண்டிவனம்.